Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (10-11-65) இதழ் 271

விசுவாவசு ஐப்பசி 25 றஜபு பிறை 15 புதன்கிழமை

## கொழும்பு மாநகரசபை தேர்தல்

### இன்று நியமனதினம்

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் இன்று தங்கள் அபேட்சா பத்திரங்களைச் சமர்ப்பிப்பர். 47 அங்கத்தவர்களைக் கொண்ட மாநாகரசபைக்கு இம்முறை 136 அபேட்சகர்கள் போட்டியிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளுக்கிடையில் போட்டிதவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. இதன்படி சமசமாஜக்கட்சி 16 வட்டாரங்களிலும் சுதந்திர கட்சி 15 வட்டாரங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சி 12 வட்டாரங்களிலும் போட்டியிடுகின்றன. 45 வட்டாரங்களில் யு. என். பி. போட்டியிடுகிறது. எம். ஈ. பி. அபேட்சகர்களை யு. என். பி. எதிர்த்துப் போட்டியிடாது. கொச்சிக்கடை வட்டாரத்திற்கு திரு கதிரவேலு ஆசாரியை யு. என். பி. இம்முறை தனது அபேட்சகராக நிறுத்தவில்லை. முன்பு சமசமாஜக் கட்சி

(8-ம் பக்கம் பார்க்க)

# வானொலி நிகழ்ச்சிகள் இங்கு தெளிவில்லை

30 லட்சம் பவுனுக்கு

## கார்ஸியா தீவை விலக்கு வாங்க பிரிட்டன் பேரம்

### ஆங்கிலோ - அமெரிக்க கூட்டு தளம் ஏற்படும்

லண்டன், நவ. 9

**மொரீஷியஸுக்குச் சொந்தமான டியகோகார்ஸியா என்ற சிறு தீவை விலக்கு வாங்குவதுபற்றிய பேச்சுக்கள் முன்னேறி வருவதாய் லண்டனில் வெளிவிவகார இலாகா அதிகாரிகள் அறிவித்தனர்.**

பிரிட்டனுக்கும் மொரீஷியஸுக்குமிடையே இத்தீவை வாங்குவதுபற்றிய பேச்சுக்கள் ஏற்கனவே நடைபெற்று வந்திருக்கின்றன.

இதுசம்பந்தமான உத்தியோகபூர்வமான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என பிரிட்டிஷ் வெளிநாட்டிலாகா அறிவித்தது.

இத்தீவில் பிரிட்டிஷ்-அமெரிக்க கூட்டுத்தளம் ஒன்றை அமைப்பதே இதன் நோக்கம் எனக் கூறப்படுகிறது.

இத்தீவுக்கு 30 லட்சம் பவுண் தருவதாக பிரிட்டன் முன்பு கூறியிருந்தது. இதுபற்றி மொரீஷியஸ் மந்திரிசபை கடந்த வெள்ளிக்கிழமை ஆலோசனை நடத்தியது. இந்தவிலை போதாது என்று மூன்று மொரீஷியஸ் மந்திரிகள் பிரதமர் ராம்கூலாமிடம் ஆட்சேபனை தெரிவித்தாகக் கூறப்படுகிறது.

மொரீஷியஸ் உற்பத்தி செய்யும் சீனி முழுவதையும் ஏற்கக் கூடிய விலை கொடுத்து வாங்கவும், மொரீஷியஸ் குடியேற்றவாசிகளை ஏற்றுக் கொள்ளவும் அமெரிக்காவும் பிரிட்டனும் சம்மதிக்காதபட்சத்தில் ஆங்கிலோ அமெரிக்க தளம் ஒன்றை நாங்கள் ஏற்கமாட்டோம் என மொரீஷியஸ் குடியேற்றமந்திரி திரு. குவால் பொதுக் கூட்டம் ஒன்றில் கூறினார்.

மொரீஷியஸ் தொழிற் கட்சியும், சுதந்திர முன்னணிக் கட்சியும் பிரிட்டிஷ் திட்டங்களை ஏற்கத் தயாராய் இருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின.

இந்து சமுத்திரத்திலுள்ள டியகோ கார்ஸியா தீவு இலங்கையின் தென்மேற்கே 1000 மைல் தூரத்திலிருக்கிறது. அங்கு ஆங்கிலோ-அமெரிக்க கூட்டுத்தளம் அமைப்பது குறித்துவாஷிங்டனுக்கும் லண்டனுக்குமிடையே பேச்சுக்கள் நடைபெற்றன என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின.

தென்கிழக்காசியா, இந்திய உபகண்டம், ஆபிரிக்கா ஆசிய பிராந்தியங்களில் சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சியை உத்தேசித்து, இத்தளத்துடன் தொடர்பாக பல ராணுவ ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு மேலும் பலதீவுகளை உபயோகிக்கும் சாத்தியமும் இருப்பதாகக்கூறப்படுகிறது.

## விசாரணைக் கமிஷன் முன் யாழ்ப்பாணத்தில் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக நேற்றுக் காலை தனது விசாரணையை ஆரம்பித்த வானொலிக் கமிஷன் முன் சாட்சியமளித்தவர்கள் பலரும் இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணப் பகுதியில் தெளிவாகக் கேட்பதில்லையென்று தெரிவித்தனர். உள்ளூர் செய்திகளை வானொலி ஒலிபரப்பவேண்டுமென்றும் இதற்கு நிருபர்கள் நியமிக்கப்படவேண்டுமென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. நாடகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் போதாதென்றும் தெரிவிக்கப்பட்டது**

'தமிழ்ப்பிரிவில் நற்சிந்தனை எல்லாச் சமயத்தவர்களுக்கும் ஏற்கத்தக்க முறையில் பொதுவாக அமைந்திருந்தால்சிறப்பாகவிருககும். அத்துடன் சினிமாப்பாட்டுக்களுக்குக் கொடுக்கப்படும்நேரம் குறைக்கப்பட்டு மெல்லிசை சங்கீதத்திற்குநேரம் கூட்டப்படல்வேண்டும். நாடகங்களுக்குத் தற்பொழுது கொடுக்கப்படும் அரை மணிநேரம் போதாது'

இலங்கை வானொலி தகவல் விசாரணைக் கமிஷன் முன் நேற்று முன்தினம் யாழ்ப்பாண செயலகத்தில் சாட்சியமளித்த முகாந்திரம் இ. பி. இராசையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சில நாட்களில் வானொலி நிகழ்ச்சிகள் தெளிவாகக் கேட்பதில்லை, யென்றும் நிகழ்ச்சிகளுக்காக கலைஞரைத் தெரிவு செய்யும்மத்தியஸ்தரை குறுகிய நாட்களுக்குள் தெரிவு செய்யவேண்டுமென்றும், உள்ளூர் செய்திகள் வானொலியில் ஒலிபரப்பாகவேண்டுமென்றும் முகாந்திரம் இராசையா மேலும் தெரிவித்தார். திருவாளர்கள் ம. ஜோசேப்பும், டபிள்யு. என் தேவகடாட்சமும் சாட்சியமளித்தனர்.

யாழ். காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானமும், திரு. கே. செல்வரத்தினமும் பின்னா சாட்சியமளித்தனர். கமிஷன் அங்கத்தவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மாலை 6-30 மணி தொடக்கம் 10 மணி வரை வானொலி நிகழ்ச்சிகள் கேட்பதற்கு உகந்த நேரமெனவும், யாழ்ப்பாணத்திலுள்ளவர்களில் 25 விகிதத்தினரிடம் வானொலிப்பெட்டிகள் உண்டென்றும் திரு. சிவஞானம் தெரிவித்தார்.

சிங்கள நிகழ்ச்சிகளும் யாழ்ப்பாணத்தில் நேயர்களால் கேட்கப்படுகின்றனவா என்று ஒரு கமிஷன் அங்கத்தவர் கேட்பொழுது சிங்களப்பாட்டுகள் கேட்கப்படுகின்றதென்று திரு. சிவஞானம் குறிப்பிட்டார்'

உள்ளூர் செய்திகள் எடுப்பதற்காக நிருபர்கள் நியமிக்கப்பட்டு காரியாதிகாகள்மூலம் அனுப்பப்படல் வேண்டுமென்று கருத்து தெரிவிக்கப்பட்டது. வானொலிப்பகுதியில் வேலை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு கலைஞர்களை தெரிவு செய்வதற்கு போதிய தகைமை இல்லையென்றும் அத்துடன் வானொலிப் பகுதியினர் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள தகைமை வாய்ந்தவர்களை நிகழ்ச்சிகளுக்காகத் தெரிவு செய்ய வேண்டுமென்றும் திரு. சிவஞானம் குறிப்பிட்டார்.

யாழ் மத்திய கல்லூரி இளைப்பாறிய அதிபர் திரு. ஏ, ஈ. தம்பர் சாட்சியமளிக்கையில் யாழ்ப்பாணத்தில் வானொலி தெளிவாக கேட்பதில்லையென்றும் பாடசாலைகள் வானொலி கேட்பதற்கு விசேஷ இடம் ஒதுக்கப்படவேண்டு மென்றும் குறிப்பிட்டார்.

அரசியல் நிகழ்ச்சிகளு மற்றும் நிகழ்ச்சிகளும் சமமான முறையில் ஒலிபரப்புவதற்கு ஒழுங்கு செய்ய வேண்டுமென்றும் இதற்கு வானொலி டைரக்டர் ஜெனரலுக்கு தேர்தல் கமிஷனர் போன்று நடைமுறையில் சுதந்திரமாக அலுவல்களைக் கவனிக்கக் கூடிய முறையில் அவருக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்றும் திரு. தம்பர் குறிப்பிட்டார்.

பிரதேசவாரியாக ஆலோசனைச்சபை அமைக்கப்பட வேண்டும் என்று திரு. தம்பர் மேலும் கூறினார்.

இன்று காலை 9-00 மணிக்கு தொடர்ந்து விசாரணை நடைபெறும்

### சந்திரனில் வைரம்!

லண்டன், நவ. 9

சந்திரமண்டலத்தில் பெருமளவு வைரம் இருக்கிறது என பிரிட்டிஷ் விஞ்ஞானி ஒருவர் கூறியிருக்கிறார் சந்திரனில்ஏற்பட்ட அதிர்ச்சிகுமுறலினால் வைரத்துளிகள் உண்டாகியிருக்கும் என அவர் கூறியுள்ளார்.

### கடந்துசென்ற கப்பல்

கொழும்பு, செவ்

இலங்கைக்கு ஆயுதங்களும் வெடிமருந்தும்தாங்கி கொழும்பு வந்த கப்பல் ஒன்று துறைமுகத்தில் ஏற்பட்ட இடநெருக்கடியால் தங்கிநிற்க வசதியில்லாது அவற்றை இறக்காமலே சென்றுவிட்டது.

### வெலிமடை உபதேர்தல்

கொழும்பு, செவ்வாய்

நுவரெலியாவில் சென்ற தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர் திரு' வில்லியம் பெர்னன் டோவை வெலிமடைத் தொகுதி உபதேர்தலில் சுதந்திரக்கட்சி நிறுத்த விருப்பதாக அறியப்படுகிறது.

### இலங்கையருக்கு தலைமைப் பதவி

லண்டன், நவ. 9

ஐ. நா. ஆதரவிலான 45 நாடுகளின் கப்பல் போக்குவரத்து சம்பந்தமான கமிட்டிக்கு லண்டனிலுள்ள இலங்கை வர்த்தக கமிஷனர் திரு. அமரசிங்க தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

### ரஷ்யா ஆசியநாடு?

புதுடில்லி, நவ. 9

இம்மாதக் கடைசியில் பேங்காக்கில் நடைபெறவிருக்கும் ஐ. நா. கல்வி, சமூக கலாச்சாரஸ்தாபனத்தின் ஆசிய அங்கத்தினர் மகாநாடில் ரஷ்யா முதல்தடவையாக ஒரு பூரண அங்கத்தினராகக் கலந்துகொளுளும். இது சம்பந்தமாக யுனெஸ்கோ நிர்வாகசபையில் இந்தியா கொண்டு வந்த ஒரு தீர்மானத்துக்கு 29 நாடுகளில் 23 நாடுகள் சாதகமாக வாக்களித்தன.

பி. டி. ஐ

## மூவரை பொலிசார் தேடித்திரிகின்றனர்

### யாழ்ப்பாண நகர படுகொலையின் எதிரொலி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் நாவலர் சந்திக்கருகில் நேற்று முன்தினம் மாலை கடைச் சிப்பந்தியொருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின்மீது மூவரை பொலிசார்தேடித் திரிகின்றனர்.

சொலையுண்ட சுப்பிரமணியம் தெய்வேந்திரத்தின் மரணவிசாரணையின் போது கூறப்பட்ட சாட்சியங்களைத் தொடர்ந்து, இரத்தினம், சுப்பிரமணியம், சண்முகம் ஆகிய மூவரையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

#### மரணவிசாரணை

திருநெல்வேலியைச் சேர்ந்த 18 வயதான சுப்பிரமணியம் தெய்வேந்திரம் நேற்று முன்தினம் மாலை நாவலர் சந்தியில் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமானது சம்பந்தமாக யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட்

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

உடுவில் ஐக்கிய பண்டக சாலை (இல. J 443) க்கு, படித்த, கூட்டுறவுப் பயிற்சி பெற்ற அனுபவம் வாய்ந்த 22—35 வயதுக்குட்பட்ட பெண் விற்பனையாளர் தேவை, மாதச் சம்பளம் எல்லாமுட்பட ரூ. 60/- பிணைப்பணம் ரொக்கம் ரூ. 1000/- உறுதி ரூ. 1500/. தராதர நற்சாட்சிப் பத்திரங்களுடன் தலைவர், உடுவில் ஐக்கிய பண்டகசாலை, சுன்னுகம் என்ற விலாசத்திற்கு 25-11-65 -க்கு முன் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பம் செய்க. 1359

கைத்தறியில் தேர்ச்சி பெற்ற பெண்களும், தேர்ச்சி பெறவிரும்பும் பெண்களும் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். "சோபனு" இன்டஸ்றீஸ், 12 மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம். 1200

### கல்வி

ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் ட்யூசன் உண்டு. யாழ்ப்பாணம் நகரத்திற்கண்மையில் வசிக்கும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். எழுத்து மூலம் விளம்பர இல; 1356, ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1356

## ஜெர்மன் செல்லும் அதிகாரிகள் கோஷ்டி

பம்பலப்பிட்டி, செவ்.

ஜவுளிஇரசாயன தொழில் துறைகளில் உதவிபெறும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்த அபிவிருத்திப்பகுதி டைரக்டர் திரு. சி. மயில்வாகனம் தலைமையில் ஜெர்மன் ஜனநாயக குடியரசுக்கு அதிகாரிகள் கோஷ்டிஒன்று விரைவில் விஜயம்செய்யவிருக்கிறது.

ஜவுளி, இரசாயன தொழில்துறையில் 20 கோடி ரூபா பெறுவதற்கு செய்யப்பட்ட ஒப்பந்தத்தையிட்டு இறுதி முடிவுகள் செய்யவும், இலங்கை-ஜெர்மன் வர்த்தக கைத்தொழில் உறவுகளை விஸ்தரிக்கவும் இவர்களது கோஷ்டி பேச்சுவார்த்தை நடத்தும்.

இந்த கோஷ்டியில் அபிவிருத்திப்பகுதி உதவிஅதிபர், கிராமவிருத்தி சிறுகைத்தொழில் அதிபர், ஜவுளி இரசாயன கார்ப்பரேஷன்களின் வேலை முகாமையாளர்கள் ஆகியோர் அங்கம்வகிக்கின்றனர்.

குழந்தைக்கு
மிகச்
சிறந்தது ....



செரமி
பேபி ஓடிக்கொலோன்
உங்களுக்கும் சிறந்தது
எங்கும் கிடைக்கும்.

# "பல இனமக்கள் வாழும் நாட்டுக்கு சமஷ்டியே சிறந்தது"

## கோப்பாய் எம். பி. கருத்து

உடுப்பிட்டி, செவ்.

"ஆட்சி நடைபெற்றுவரும் நாடுகள் ஒவ்வொன்றிற்கும் அரசுரிமை இருக்கிறது. சமாதான காலங்களிலும், யுத்த காலங்களிலும் சகல அதிகாரங்களும் அரசுரிமை உள்ள நாடுகளில் சட்டசபையின் சொற்படிதான் நிர்வாகம் நடக்கும். பல நீதிமன்றங்களில் சட்டசபையினுல் ஆக்கப்பட்ட சட்டங்களையே அமுல் நடத்திவருகின்றன. இயற்கைக்கு மாருன சட்டம் தவிர்ந்த எந்தச் சட்டத்தையும் சட்டசபை இயற்றுலாம். ஒருநாடு தான் விரும்பிய சட்டத்தை ஆக்க முடியும். ஜனநாயக நாட்டிலே இவை சாதாரண நிகழ்ச்சிகள் தத்துவ ரீதியாக அரசுரிமையை ஆராயுங்கால் ஒற்றையாட்சி நாடு முழுதும் ஒரு மன்றத்தின்கீழ் இருந்து இயங்கக் கூடியதேயாகும்." என்று கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை நெல்லியடி தமிழரசுக்கட்சி வாலிபர் முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

வாலிப முன்னணித் தலைவர் திரு. ஜே. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மேலும் கூறியதாவது:—

நாடு முழுவதற்கும் சட்டமியற்ருமல் சில விஷயங்களில் மாத்திரம் முழுவதற்கும் சட்டமியற்றி, மற்றைய இடங்களில் தனிமன்றங்கள் அமைத்துக் கொடுப்பதே கூட்டு ஆட்சிஎன்பர். ஒன்ருேடுமற்றதுகூட்டாக இயங்குவதே சமஷ்டியாகும். இலங்கை ஓர் பெரிய தேசமாக இருந்திருந்தால் சமஷ்டி அரசியல் அதிக வாய்ப்பளிக்கும். பலமொழி, பலஇன மக்கள் வாழுமிடங்களுக்குச் சமஷ்டி அரசியலமைப்பு மிகவும் உகந்தது,

கூட்டாட்சியைப் பெறுவதற்கு மற்றவர்களின் சம்மதம் வேண்டும் என்று பலர் கூறுவார்கள். ஆனுல் கனடாவில் சண்டையிட்டே கூட்டாட்சியைப் பெற்ருர்கள். பாகிஸ்தான் ஓர் கூட்டாட்சி அரசாங்கம். முதலில் இராச்சியங்களும் அங்கங்களும் இருந்தாற்ருன் சமஷ்டி அமையும் என்பது அவசியமில்லை.

கழகச் செயலாளர் திரு. க. செ. சுவர்ணராசா நன்றி கூறினுர்.

## வரவுக் குறைவு; கமிட்டி ஆராயும்

பம்பலப்பிட்டி, செவ்.

அரசாங்க இலாகாக்களிலும், கார்ப்பரேஷன்களிலும் உத்தியோகஸ்தர்கள் வரவு 'ஒழுங்கீனம் அதிகரித்துவருவதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தொழில்நுட்ப வேலைகள் சம்பந்தப்பட்ட இலாகாக்களிலும் கார்ப்பரேஷன்களிலும் உத்தியோகஸ்தர்கள் வரவுக் குறைவு அதிகரித்துள்ளதாக பல அமைச்சுகளும் தெரிவிக்கின்றன. இதுசம்பந்தமாக ஆராய்ந்து இவை நிவர்த்திப்பதற்கு வழிவகைகளைசிபார்சுசெய்ய ஒரு கமிட்டியை நிறுவுவது என அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தெரியவருகிறது.

## ரூ. 110,098 நஷ்டம்

பம்பலப்பிட்டி, செய்.

கொழும்பில் அரசாங்கத்தால் நடாத்தப்பட்டு வந்த முதலாவது விடுதிச்சாலை முதல் நான்கு மாதங்களிலும் சுமார் ரூபா 110,098 நஷ்டம் காண்பித்துள்ளது.

## பஸ் சாரதிகள் எச்சரிக்கை

பம்பலப்பிட்டி, செவ்.

கடமையாற்றும் போது மதுபோதையிலிருக்கும் இலங்கை போக்கு வரத்து பஸ்சாரதிகள்மீது, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

இலங்கை போக்குவரத்து சபைத்தலைவர் திரு. ஆர். ரி. டி. சில்வா மேற்கண்ட எச்சரிக்கையை எல்லா பஸ் சாரதிகளுக்கும் விடுத்துள்ளார்.

### அரசாங்க அறிவித்தல்

### 1966-ம் ஆண்டுக்குரிய துவக்கு முதலியவற்றின் உத்தரவுப் பத்திரம் புதுப்பித்தல்

என். 1977 யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள துவக்கு முதலியன 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் (மார்கழி) 1-ந் திகதி தொடக்கம் 1965-ம் ஆண்டு டிசம்பர் 31-ந் திகதி வரைக்கும் இம்மாவட்டத்திலுள்ள பிரிவுக்காரியாதிகாரிகளினுல் அந்தந்தக் காரியாலயங்களில் புதுப்பிக்கப்படும். எல்லா மனுக்களும் காரியாதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும். துவக்குச் சொந்தக்காரர்கள் உத்தரவுபத்திரங்களை டிசம்பர் மாதத்தில் புதுப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1965-ம் ஆண்டு மார்கழி 31-ந் திகதி அன்று அல்லது அதற்குமுன்பு துவக்கு உத்தரவுப பத்திரங்களைப் புதுப்பிக்கத் தவறியவர்கள் உத்தரவுப் பத்திர கட்டணஅளவு பணம் தண்டமாக இறுக்க வேண்டும். 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ந் திகதி வரைக்கும் பிரிவுக் காரியாதிகாரிகளினுல் உத்தரவுப்பத்திரம் தண்டம் அறவிடப்பட்டபின் புதுப்பிக்கப்படும். அதன்பின்னர் யாழ்ப்பாணக் கச்சேரியில் புதுப்பிக்கப்படும. மேலும் விபரங்களுக்கு 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்.
462

## மானிப்பாய் இந்துக் கல்லூரி

### கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்கள்

(போதனு மொழி- ஆங்கிலம்/தமிழ்)

மேற்படி வகுப்புக்களில் சேர விரும்பும் மாணவர்கள், 30-11-65 - க்கு முன் அதிபர், இந்துக் கல்லூரி, மானிப்பாய் என்ற முகவரிக்கு உரிய விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பிக்க.

அதிபர்,
இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.
1245




...ன் குடும்பத்திற்கு சமைத்து, இடித்தல், அரைத்தல் போன்ற கடினமான வேலைகள் செய்து, ஆடைகள் துவைத்து, பிள்ளைகளையும் வளர்த்தெடுத்து, அல்லும் பகலும் உழைக்கும் அவளுக்கு குன்ருத பெலனும் சக்தியும் அவசியம். ஆகவே அவளுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவளை அனுதினமும் சளைக்கா சக்தியுடன் சுகமாக இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி ரொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனுல் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.




மாமைட்
78

# ஐ. நா. வில் சீன அனுமதிகுறித்து பொதுச்சபை விவாதம்

## அமெரிக்கா முட்டுக்கட்டை

நியுயோர்க், நவ. 9

சீனுவை அனுமதிப்பது குறித்து ஐ. நா. பொதுச்சபை இப்போது விவாதித்து வருகிறது. வழக்கம்போல் அமெரிக்கா இதை ஆட்சேபித்திருக்கிறது.

''சீனுவை ஐ. நா.வில் அனுமதிப்பது பலவீனத்தையே காட்டுமென்றும், அதன் கடந்தகால தற்போதைய நடவடிக்கை நம்பிக்கையளிப்பதாய் இல்லை'' என்றும் அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பர்க் கூறினுர்.

சீனுவை அனுமதித்தால் ஐ. நா.வை அபிவிருத்தி செய்ய அது உதவாது. ஐ. நா.வை உடைக்கச் சதி செய்யச் சீனுவுக்கு இடம் கொடுத்ததாகவே முடியும் என்றும் கோல்ட்பர்க் குறிப்பிட்டார்.

ரஷ்யப் பிரதிநிதி பேசுகையில் சீனுவை உடனடியாக அனுமதிக்கவேண்டும் என்ருர்.

கம்போடியப் பிரதிநிதி பேசுகையில் சீனுவை அனுமதிக்காவிட்டால் அது ஐ. நா. சாஸனத்தை மீறியதாகும் என்றும் ஜனநாயக நாடான சீனுவுக்கு உலக சமாதானத்தில் நம்பிக்கை உண்டென்றும் கூறினுர்.

தேசிய சீன (சியாங்கைஷேக்) பிரதிநிதி பேசுகையில் பீகிங்கை அனுமதிப்பது ஐ. நா.வின் அழிவுக்கே வழிவகுக்கும் என்ருர்.

சீனுவை அனுமதிக்க பொதுச்சபையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் தேவை. சென்ற முறை பொதுச்சபையில் பாதிக்குக் குறைவான நாடுகளே சீனுவை ஆதரித்ததென்பது குறிப்பிடத்தக்கது.

சீனுவை ஐ. நா.வில் அனுமதிகோரும் தீர்மானத்தை 11 கம்யூனிஸ்ட், நடுநிலை நாடுகளின் சார்பாக இம்முறை கம்போடியா கொண்டுவந்தது.

# பாக். விமானம் இந்திய கிராமத்தை தாக்கியது

## ஐ. நா. அதிகாரிகள் ஊர்ஜிதம்

நியுயோர்க், நவ. 9

பாகிஸ்தான், போர்நிறுத்தப் பகுதி நெடுகிலும் துருப்புக்களைப் பலப்படுத்தி வருவதாக பாதுகாப்புச் சபைக்கு இந்தியா புகார் கூறியிருக்கிறது.

தலைமைக் காரியதரிசி யுதாண்டுக்கு நிரந்தரப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி எழுதியுள்ள கடிதமொன்றில் இம்மாத முதல் வாரத்தில் மட்டும் பாகிஸ்தான் 29 முறை போர் நிறுத்தத்தைப் புதிதாக மீறியிருக்கிறதெனக் கூறியிருக்கிருர். ராஜஸ்தான் அரங்கில் பாகிஸ்தான் விமானமொன்று இந்தியக் கிராமம் ஒன்றைத் தாக்கியதாயும், இதன் விளைவாக ஒருவர் கொல்லப்பட்டு, இருவர் காயமடைந்தனர் என்றும் இந்தியா கூறிய புகாரை ஐ. நா. பார்வையாளர்கள் ஊர்ஜிதம் செய்திருக்கின்றனர் இந்த விமானத்தின் ஒருபக்கம் பாகிஸ்தான் அடையாளமும், மற்ருேர் பக்கம் இந்திய அடையாளமும் காணப்பட்டதாம்.

நேற்று உள்நாட்டு மந்திரி திரு. நந்தா விடுத்த அறிக்கையில் பாகிஸ்தான் தாக்குதல் ஒரு முதல்கட்டமே என்றும், இரண்டாவது தாக்குதல் ஏற்படக்கூடும் என்றும், அது இன்னும் பெரிதாய் இருக்கும் என்றும் கூறியிருக்கிருர்.

காஷ்மீர் பிரதமர் திரு. ஸாதிக் நேற்று இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியை சந்தித்துப் பேசினுர்.

பாகிஸ்தானுடைய சதிகார மத்திய நிலையம் ஒன்றை இந்தியத் துருப்புக்கள் காஷ்மீரில் நசுக்கியதைத் தொடர்ந்து நாசவேலைகள் அங்கு குறைந்துவிட்டன என்றும் திரு. ஸாதிக் கூறினுர்.

பாகிஸ்தான் இந்தியப் பகுதியில் வான ஊடுருவல் செய்வதை நிறுத்துமாறு இந்தியா நேற்று பாகிஸ்தான் ஹைகமிஷனரிடம் ஆட்சேபனைத்தாக்கல் செய்துள்ளது.

## பிரிட்டனில் இரு மசோதாக்கள்

லண்டன், நவ. 9

கொலைக்குத் தூக்குத்தண்டனை விதித்தல், இன வெறுப்பைத் தூண்டுதல் ஆகியவற்றை ஒழிக்கும் இரு பிரதான மசோதாக்கள் இன்று பிரிட்டனில் சட்டமாகின.

தூக்குத் தண்டனை 5 ஆண்டுகளுக்குப் பரீட்சார்த்தமாக ஒழிக்கப்படும்.

இன வெறுப்பைத் தூண்டும் குற்றங்களுக்கு இரண்டாண்டு சிறைவாசமும், 1,000 பவுண் அபராதமும் விதிக்கப்படும். பி. டி. ஸி.

## விமான விபத்தில் 70 பேர் பலி

சின்சினுட்டி, நவ. 9

நியுயோர்க்கிலிருந்து சின்சினுட்டிக்கு 100 பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த அமெரிக்க ஜெட் விமானம் நேற்று விபத்துக்குள்ளாகியது குறித்து 70 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## மீண்டும்தவருன தாக்குதல்

சைகோன், நவ. 9

அமெரிக்க விமானம் ஒன்று நேற்று தவறுதலாக தென்வியட்னும் கிராமம் ஒன்றில் குண்டுகளை வீசியதால் ஒரு பெண் கொல்லப்பட்டார். 10 பேர் காயமடைந்தனர்.

கடந்த இரு வாரங்களில் இவ்வித தவறுதல் ஏற்படுவது இது இரண்டாவது தடவையாகும்.

தலா 250 ருத்தல்கள் கொண்ட 8 குண்டுகள் இங்கு போடப்பட்டன.

கடந்த 30-ம் திகதி இவ்வாறு அமெரிக்க விமானங்கள் ஒரு தென்வியட்னும் கிராமத்தைத் தாக்கியபோது 48 பேர் மாண்டனரென்பதும், 55 பேர் காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஹொலிவூட்டில் மார்க்கரெட்

லொஸ்ஏஞ்சல்ஸ், நவ. 9

பிரிட்டிஷ் இளவரசிமார்க்கரெட்டும் அவரது கணவர் ஸ்னேடன் பிரபுவும் இங்கு ஹொலிவூட் நடிகர்களுடன் விருந்துண்டனர்.

இராக் களியாட்ட கிளப் ஒன்றில் நடைபெற்ற இவ்விருந்தில் ஹொலிவூட்டின் உயர் வட்டாரங்கள் பல கலந்துகொண்டன.

முதலில் ஒரு டாக்ஸியில் எலிஸபெத்டெய்லரும், ரிச்சர்ட்பேட்டனும் வந்தனர். அவர்களுடன் ரோஸலிண்ட்ரஸ்ஸல் வந்தார்.

பிராங்க் சினத்ரா, மியாபாரோ, ஜீன்கெல்லி, வாரன்பீட்டி, ஷேர்லிமக்லேன், டெனிகே, லாரன்ஸ் ஹார்வி, பிரெட் அஸ்டயர், பால்நியூமன், ஜொனி உட்வார்ட், ஜோஸப் கொட்டன், பெட்ரீஷியாமெடீனு, ஜூடிகார்லண்ட், ஜேம்ஸ் ஸ்டீவர்ட், ரொடி மெக்டோவல், ஸ்டீவ் மெக்குயின், எட்பைர்ன்ஸ், நெடாலிவுட், மைக் நிக்கல்ஸ், ஜூலி அண்ட்ரூஸ், கிரகரி பெக் ஆகியோர் விருந்தில் கலந்து கொண்டனர்.

## புலி வேட்டைக்குப் பரிசு

புதுடில்லி, நவ. 9

டில்லிக்குக் கிழக்கே 145 மைல் தூரத்திலுள்ள ரைனிடாலில் 3 புலிகள் குறைந்தது 35 மனிதர்களைக் கொன்றிருப்பதாக இங்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

கரும்பு வயல்களில் ஒளிந்திருப்பதாகக் கூறப்படும் இந்தப் புலிகளைச் சுட்டுக் கொல்பவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் எனமாவட்ட மாஜிஸ்டிரேட் அறிவித்திருக்கிருர்.

சைக்கிளில் செல்பவர்களையும், ரிக்ஷாக்களில் செல்பவர்களையும் இப்புலிகள் தாக்கியிருப்பதுடன், வயலில் வேலைசெய்யும் தொழிலாளர்களையும் கௌவிச் சென்றிருக்கின்றன. மனிதர்களை கொன்று தின்பதையே இப்புலிகள் மூன்றும் தங்கள் வேலையாகக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (பி. டி. ஸி.)

## ஐ. நா. அரசியல் கமிட்டி

நியுயோர்க், நவ. 9

அணு ஆயுதங்கள் பரவுவதைத் தடுக்கும் உடன்படிக்கையை வரையுமாறு ஐ. நா. அரசியல் கமிட்டி, நேற்று ஆயுத பரிகரண மகாநாட்டைக் கேட்டது.

## திங்கள் உணவு நின்றது

புதுடில்லி, நவ. 9

காஷ்மீர் முதல்வர் திரு. ஜி. ன். ஸாதிக் நேற்றிரவு திரு. சாஸ்திரியைச் சந்தித்தபோது, திங்கட்கிழமையானதால் உணவு அருந்தவில்லை. உணவு இல்லாமலே இருவரும் பேச்சு நடத்தினர்.

## கோவா மந்திரிகளில் நம்பிக்கையில்லை

பஞ்சிம், நவ. 9

கோவா மந்திரி சபை மீது இரு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

# கம்யூனிஸ்ட் ஊழியர்கள் பலர் சுடப்பட்டனர்

## இந்தோனேஷிய ராணுவம் நடவடிக்கை

ஜாகர்த்தா, நவ. 9

ஜிலாஜாப் என்ற நகரில் கம்யூனிஸ்ட் தொழிலாளர்களைக் கொண்ட உரத் தொழிற்சாலை ஒன்றை இந்தோனேஷிய ராணுவம் சூழ்ந்துகொண்டு, மெஷின் துப்பாக்கிகளினுல் அவர்களை சுட்டுக்கொன்ருர்கள். எத்தனை பேர் இதற்குப் பலியாகினர் என்பது தெரியவில்லை.

நகரிலுள்ள சிறுகடைகளிலிருந்து வாங்கப்பட்ட உணவை அருந்தியபின் 40 ராணுவ பாரா துருப்புக்கள் மரணமடைந்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த மரணங்களுக்கு கம்யூனிஸ்டுகளே காரணம் என ராணுவம் குற்றஞ்சாட்டியது.

இதற்கிடையில் இந்தோனேஷிய ராணுவமும், முஸ்லீம்களும் கம்யூனிஸ்டுகளுக்கெதிரான தங்கள்போராட்டத்தில் வெற்றிபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சியைக் கலைத்துவிடுவது பற்றித் தாம் ஆலோசித்துவருவதாய் ஜனுதிபதி சுகர்ணே சமீபத்தில் அறிவித்திருந்தார். புரட்சிக்கு வழிவகுத்தவர்கள் கம்யூனிஸ்டுகள்தான் என ராணுவமும், முஸ்லீம்களும் குற்றஞ்சாட்டியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை 5000க்கு மேற்பட்ட கம்யூனிஸ்டுகள் நாடெங்கும் கைதுசெய்யப்பட்டிருக்கிருர்கள்.

ராணுவ உத்தரவின் கீழ் கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைள் பல தடை செய்யப்பட்டிருக்கின்றன. (பி. டி. ஸி.)

# ரொடீஷிய தலைமை நீதிபதி லண்டன் பயணம்

ஸாலிஸ்பரி, நவ. 9

ரொடீஷியப் பிரதம நீதிபதி சேர் ஹியூபீட்டில் லண்டனுக்குப் புறப்பட்டிருக்கிருர் என்றும், பிரிட்டிஷ் அரசாங்கத் தலைவர்களுடன் அவர் பேசவிருக்கிருர் என்றும் பிரதமர் இயான்ஸ்மித் அறிவித்தார்.

ரொடீஷியா-பிரிட்டன் பேச்சுவார்த்தைபற்றி அவர் குறிப்பிடுகையில் புதிய அபிவிருத்தி எதுவுமில்லை என்றும் ஆரம்பநிலையே மீண்டும் நிலவுவதாயும் அவர் கூறினுர்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனை மீண்டும் மால்டாவில் சந்திப்பதால் பயன் எதுவும் ஏற்படமாட்டாது என்றும் ஸ்மித் கூறினுர்.

ரொடீஷியாவின் தற்போதைய நிலைகுறித்து திரு. வில்சன் இன்று காமன்ஸ் சபையில் அறிக்கை ஒன்றை வெளியிடவிருக்கிருர்,

## சுதந்திரம் வழங்குக

நியூயோர்க், நவ. 9

பிரிட்டிஷ் ஆபிரிக்க காலனிகளான பெச்சுவானுலந்து, சுவாசிசலந்து, பஸுடோலந்து ஆகியவற்றுக்கு சுதந்திரம் அளிக்க வேண்டும் என 18 ஆசிய-ஆபிரிக்க நாடுகள் தர்மகர்த்தா சபையில் தீர்மானம் ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றன.

## பாகிஸ்தானில் இந்தோனேஷிய கடற்படை

கராச்சி, நவ. 9

இந்தோனேஷிய கடற்படைக் கப்பல்கள் பாகிஸ்தான் துறைமுகங்களுக்கு வந்திருக்கின்றன. பரஸ்பர விஜய அடிப்படையில் இவை வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## ரொடீஷிய மக்களுக்கு உதவிக் கமிட்டி

அல்ஜீயர்ஸ், நவ. 9

ரொடீஷிய மக்களுக்கு நேரடி ராணுவ உதவி வழங்குமுகமாக ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறது என இங்கு அறிவிக்கப்பட்டது.

## 100 வியட்காங் பலி

சைகோன், நவ. 9

அமெரிக்க, ஆஸ்திரேலிய துருப்புகள்நேற்று100 வியட்காங்கியர்களைக் கொன்றதாய் அறிவிக்கப்பட்டது.

## கனடா தேர்தல்

ஒட்டாவா, நவ. 9

கனடாவில் இப்போது பொதுத் தேர்தல் நடைபெற்று வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் அங்கு நடக்கும் ஐந்தாவது பொதுத் தேர்தல் இது. பிரதமர் பியர்ஸன் தனது தொகுதியில் ஏற்கனவே வெற்றியடைந்திருக்கிருர்,

## பிலிப்பைன்ஸ தேர்தல்

மணிலா, நவ. 9

பிலிப்பைன்ஸில் நடைபெற்றுவரும் தேர்தலில் மேலும் கைகலப்புக்களைத் தவிர்க்கும்பொருட்டு ராணுவத்தினர் பல இடங்களில் காவல் செய்துவருகின்றனர். இதுவரை தேர்தல் கைகலப்புக்களில் இங்கு 40 பேர் கொல்லப்பட்டிருக்கிருர்கள்.

## சீனுவுக்கு ஆஸி. கோதுமை

பீகிங், நவ. 9

ஆஸ்திரேலியாவிலிருந்து 5 லட்சம்டன்கோதுமையை சீனு வாங்குகிறது. இதன் விலை 1 கோடி பவுன். சென்ற மாதம் கனடாவிலிருந்தும் சீனு கோதுமை வாங்கியது.

## 20,000 பேர் ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, நவ. 9

தென் கொரியா—ஜப்பான் சகஜ உறவு உடன்படிக்கையை எதிர்த்து 20,000 பேர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

## 102 எம். பி.க்கள் ஆதரித்தனர்

ஜாகத்தா, நவ. 9

102 இந்தோனேஷிய பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் சுகர்ணே ஆட்சிக்கெதிரான புரட்சிக்கு ஆதரவாய் இருந்தார்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும், விசாரணை தொடர்ந்து நடைபெறுவதால் இந்த எண்ணிக்கை மேலும் திகரிக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

கோலாலம்பூர் நவ. 9

இந்தோ—பாகிஸ்தான் பூசலில் தங்களுக்கு ஆதரவளித்தது குறித்து மலேசியாவுக்கு இந்தியா நன்றியை தெரிவித்திருக்கிறது.

### மணிவாக்கு

இந்தக் காலத்திலே உலகத்தோடு தொடர்பில்லாமல் ஒரு மனிதனும் வாழமுடியாது. என் ஜாதி. என்மதம் என்ற வெறி ஒழியவேண்டும். காலையில் எழுந்தவுடன் 'உலகம் வாழ்க' என்று சொல்லவேண்டும். உலகம் வாழ என எண்ணி வழிபடவேண்டும்.
—திரு. வி, க.

ஈழநாடு

ELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phones 339

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி மீ 25 உ (10-11-65)

## தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி

தென்னிலங்கையிலும் மத்திய மாகாணத்திலும் உள்ள தமிழ்ப் பிள்ளைகள் தங்கள் தாய்மொழியில் கல்வி கற்க முடியாத மோசமான தொருநிலை ஏற்பட்டுள்ளது இந்த நிலையை மாற்றி தமிழ்ப் பிள்ளைகளுக்கு அவர்களுடைய அடிப்படை உரிமைகளைப் பெற வழி வகுக்கவேண்டும்.

தென்னிலங்கையிலும் மத்திய மாகாணத்திலுமுள்ள 80 பாடசாலைகளில் தமிழ்வகுப்புக்களை மூடிவிடுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதைத் தொடர்ந்து இதர பாடசாலைகளிலும் தமிழ்மொழி மூலம் கல்வி அளிக்கப்படுவதையும் நிறுத்தக்கூடும். சிலசமயம் தமிழ்ப் பாடசாலைகளும் மூடப்படலாம். தமிழ்மூலம் கல்வி அளிக்கப்படுவதற்கு வசதியில்லையென்ற காரணத்தால்தான் 80 பாடசாலைகளில் தமிழ்வகுப்புக்கள் மூடப்பட உத்தரவிடப்பட்டுள்ளதானால், இந்த வசதிக் குறைவுகள் இப்பொழுதுதான் ஏற்பட்டிருப்பதாகக் கூறமுடியாது. சென்ற சில ஆண்டுகளில் காண்பிக்கப்பட்ட அசிரத்தையும் கவனக் குறைவுமே இன்றைய நிலைக்குக் காரணம்என்று துணிந்து கூறலாம். தமிழாசிரியர்களின் பற்றுக்குறையே தென்னிலங்கையின் தமிழ்க்கல்வி அளிக்க முடியாமலிருப்பதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. இந்தப் பற்றுக்குறை திடீரென்று எப்படி ஏற்படமுடியும்? கல்விஇலாகா இதை ஏன் முன்னரே கவனிக்கவில்லை? முன்னைய அரசாங்கம் தமிழ்ப் பாடசாலைகள், தமிழ்மொழி மூலம் கல்வி அளிப்பது சம்பந்தமாக கல்விஇலாகாவுக்கு விசேஷஉத்தரவு ஏதும் பிறப்பித்திருந்ததா?

எது எப்படியாயினும் இலங்கையில் எந்தப் பக்கத்திலுள்ள குழந்தையும் தனது தாய்மொழியில் கல்விகற்க உரிமையும் வசதியும் இருக்கவேண்டும். இது ஜனநாயக அடிப்படை உரிமை இந்த உரிமையை தமிழ்ப் பிள்ளைகளுக்கு எக்காரணம் கொண்டும் மறுக்கப்படக்கூடாது. இவ் விஷயத்தில் நமது தமிழ்ப் பிரதிநிதிகள் அதிக கவனம் செலுத்தவேண்டும். கல்விமந்திரி தமது வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு வரும்வரைக்கும் கூட இவ் விஷயத்தில் தாமதம்செய்வது நல்லதல்ல. அவசியமானல் பிரதமமந்திரியிடமே இவ் விஷயத்தை எடுத்துச்சொல்லி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ்ப் பிள்ளைகளுக்கு அவர்கள் தங்கள் தாய்மொழியில் கல்விபெறும் உரிமையை அளிப்பதும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதும் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகவே ஆட்சிக்கு வந்துள்ள தேசிய அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் அரசாங்கத்துக்கு மட்டுமல்ல தமிழாசிரியர்களுக்கும் பொறுப்பு உண்டு. அவர்களும் தங்கள் கடமையைச் செய்வார்களென நம்புகிறோம்.

## வெங்காயச் செலவு

வருஷாவருஷம் சுமார் முப்பது லட்சம் ரூபாய் வெங்காயம் இறக்குமதி செய்வதற்குச் செலவிடப்படுகிறது. நாட்டுக்குத் தேவையான வெங்காயம் உற்பத்தி செயயக்கூடிய வாய்ப்பிருந்தும் முப்பது லட்சம் ரூபாய் வெங்காயம் இறக்குமதி செய்வதற்குச் செலவிடவேண்டியது அவசியமா? வெங்காயத்தைச் சேமித்து வைக்கக் கூடிய வசதிகள் செய்யப்பட்டால் வெங்காய இறக்குமதிக்காக வருடத்தில் செலவாகும் முப்பது லட்ச ரூபாயும் மிச்சமாகும்.

ஈரவெங்காயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பிரதான உப உணவுப் பொருள்களில் ஒன்று. இப்போது இப்பயிர் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியிலும் செய்கைபண்ணப்படுகிறது. இருந்தபோதிலும் வருடத்தில் சில மாதங்களில் வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு அவற்றை இறக்குமதி செய்ய நேரிடுகிறது. தை மாதத்தில் இரண்டாயிரத்து ஐநூறு ஏக்கரில் செய்கை பண்ணப்படும் வெங்காயம்ஆடிமாதத்தில் ஐநூறு ஏக்கர் நிலத்தில் தான் செய்கை பண்ணப்படுகிறது. ஆடியில் நடப்படும் வெங்காயம் . புரட்டாதி ஐப்பசியில் அறுவடை செய்யப்படுகிறது. இது மாரிகாலம். மாரிகாலத்தில் வெங்காயத்தைஅதிக நாட்களுக்கு வைத்திருக்க முடியாது. அது அழுகத் தொடங்கிவிடும். வெங்காயத்தை காற்ரோட்டமான, ஈரத்தன்மையற்ற இடத்தில்தான் சேமித்து வைக்கமுடியும்.

வெங்காயத்தைச் சேமித்துவைப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டால் ஈரவெங்காயம் இறக்குமதிசெய்யவேண்டிய அவசியமேற்படாது. இதன்மூலம் வெங்காயத்துக்காக வெளிநாடுசெல்லும் முப்பது லட்சம் ரூபாயை மிச்சப்படுத்துவதுமட்டுமல்ல, விவசாயிகளுக்கும்வாழ்வளிக்கவும் முடியும். உணவு விவசாய அமைச்சர் இவ்விஷயம் பற்றியும் கவனம்செலுத்துவது நல்லது.

# போர்முனை சென்று திரும்பிய சிவாஜி, ஜெமினி, சாவித்திரி

## திருச்சிக் கூட்டத்தில் கூறிய அனுபவங்கள்

திருச்சி, நவ. 9

ஒவ்வொரு இந்தியனும் தன்னுடைய மானத்தைக் காப்பாற்றவேண்டும். இதறகு பேச்சுத் தேவையில்லை. செயல்தான் வேண்டும் என்று இந்திய - பாகிஸ்தான் யுத்தம் நடைபெற்ற இடங்களுக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பியநடிகர் திலகம் சிவாஜிகணேசன் திருச்சி மதுரம் மைதானத்தில் போர்முனைக்குச் சென்று திரும்பிய கலைஞர்களுக்களிக்கப்பட்ட வரவேற்பின்போது பேசுகையில் கூறினார்:

ஆயிரக்காணக்கான ரசிகர்கள் மைதானத்தில் கூடியிருந்து ஆரவாரம் செய்து 'நட்சத்திரங்களை' வரவேற்ருர்கள்.

போர்முனைக்குச் சென்று திரும்பியவர்களை ஜெமினி கணேசன் அறிமுகம் செய்து வைத்தார். இதோ அண்ணன் சிவாஜி, தம்பி ஸ்ரீதர், தங்கச்சி சாவித்திரி என்று ஆரம்பித்த ஜெமினி வரிசைக்கிரமத்தில் முத்துராமன், ஏ. வி. எம். ராஜன், விஸ்வநாதன், கோபாலகிருஷ்ணன், தேவிகா, விஜயா, ஜயந்தி, மாடி லட்சுமி ஸ்ரீநிவாசன் ஆகியவர்களை அறிமுகம் செய்துவைத்தார்

சிவாஜி கணேசனின் வேண்டுகோளைத் தொடர்ந்து கூட்டத்திலிருந்த ஆண்களும் பெண்களும் தங்கச் சங்கிலி. காப்பு, மோதிரமாகியவைகளை தேசிய பாதுகாப்பு நிதிக்கு அன்பளிப்புச் செய்தார்கள். பணமாகவும் அநேகர் கொடுத்தனர். கூட்டம் ஜில்லா கலெக்டரின் தலைமையில் நடைபெற்றது.

கண்களிலிருந்து நீர் பொங்கி வழியப் பேசிய சிவாஜி ஆவேசத்தோடு தன்னையே மறந்து எல்லா மக்களையும் அரசாங்கத்துக்குப் பொருளுதவி செய்யும்படி கேட்டுக்கொண்டார். வெளிநாடுகளிலிருந்து யுத்த தளபாடங்களாகவும், இதர பொருட்களாகவும் தருவிக்க வேண்டியிருப்பதால் அதற்கு 'எக்சேஞ்ச்' வேண்டுமெனவும், அதைச் சமாளிக்க தங்கத்திஞல் முடியுமெனவும், இருப்பிலிருக்கும் தங்கத்தை நாட்டைக் காக்கக் கொடுக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

தேசிய பாதுகாப்பு நிதிக்குப் பெரும் ஆதரவு கொடுத்து அரசாங்கத்தின் பணிகளுக்கு தோள் கொடுக்க ஒவ்வொரு இந்தியனும் முன்வரவேண்டும் என்று சிவாஜி கேட்டுக்கொண்டார். அவர் அப்போது சொன்னதாவது:

எமது போர்முனை விஜயத்தில் நாம் கண்டதை வாய்விட்டுச் சொல்ல முடியாது. எத்தனை இன்னல்கள், எவ்வளவு கஷ்டங்கள், மனத்தைக் காக்கவும், நாட்டைக் காக்கவும் வீரர்கள் போர் புரிகிருர்கள். வீரர்களுடைய இந்தப் பெருஞ் செயல் நமது மானத்தைக் காப்பதாகும். வருங்கால சந்ததியினரின் மானத்தையே காக்கும். இன்று நாடுதான் தேவை. சொந்த வாழ்வு தேவையில்லை.

பலத்த ஆரவாரத்துக்கிடையில் சாவித்திரியின் குரல் எழுந்தது. நாட்டுக்காகத் தியாகம் செய்யும் போர் வீரர்களைப் பற்றி அவர் கூறினர். போர் முனைக்குச் சென்றபோது ஜலிந்தர் என்ற இடத்திலுள்ள ஆஸ்பத்திரி ஒன்றுக்கு விஜயம் செய்ததாகவும் அங்கு தாம் கண்ணுற்ற காட்சி தமக்கு வீரவுணர்வை உண்டாக்கிவிட்டதாகவும் கூறினர். அப்போது காவித்திரி சொன்னர்:

ஜலிந்தர் ஆஸ்பத்திரியில் காயங்களுடன் காணப்பட்ட போர் வீரர்களில் ஒருவருக்காவது கால்களிலோ, முதுகிலோ காயம் காணப்படவில்லை. அவர்களின் மார்புகளில்தான் அக்காயங்களைக் கண்டேன். இவ்வளவு பெரிய மகாவீரர்களைப் பார்க்கும்பொழுது ஒரு புறத்தில் பெருமைப்பட்டேன்; மறுபுறம் வேதனையடைந்தேன். அவர்கள் தாம் சுகமடைந்து மறுபடியும் போர்முனைக்குத் திரும்ப ஆவலாயிருக்கிருர்கள் என்பதைக்கேட்க நாம் பெருமைப்பட்டோம்.

ஜெமினி கணேசன் பேசுகையில், பொதுமக்கள் கொடுக்கும் பணம் நாட்டைக்காக்கவல்ல. உயிரைக் காக்கவல்ல. மானத்தைக் காக்கத்தான் என்று கூறினர். தங்கம் தங்கமாகக் கொடுத்து அரசினருக்குஆதரவளிக்கவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார்.

வேண்டுகோள் விடுத்து முடிவதற்குள்ளாக தங்க நகைகள் குவியத்தொடங்கின.

சிவாஜி கணேசனுடைய குரல் 'ஜெய்ஹிந்த்' என்றொலித்ததைத் தொடர்ந்து விழாமுடிவடைந்தது.

## 'புதிய சகாப்தத்தில் வாழ்கிறேம்' -செனட்டர் ஜேசுதாசன்

மஸ்கெலியா, செவ்.

"நாம் இப்போது புதிய தொரு சகாப்தத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறேம். இந்நாட்டில் வாழும் சகல மக்களும் ஒற்றுமையுடனும், நட்புறவுடனும் வாழ்வதற்கு வழிவகுப்பதே நமது லட்சியம்" என்று புதிதாக நியமனம் பெற்றுள்ள செனட்டர் ஆர். ஜேசுதாசன் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டமொன்றில் - பேசுகையில் குறிப்பிட்டார்.

தலவாக்கலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வாலிபர் முன்னணியினரால் அளிக்கப்பட்ட இவ்வரவேற்புக்கூட்டம் தலவாக்கலை பஜாரில் நடைபெற்றது.

"நாட்டினுடைய நிலைமையைஉணர்ந்தே ஐ தே. கட்சியினர் தேசிய அரசாங்கத்தைஅமைத்தனர். நமது பிரதமர் டட்லி சேனநாயக்காவை இதற்காகப் பாராட்டவேண்டும் என்றும் செனட்டர் ஜேசுதாசன் சொன்னர்.

## கணவன் சரணடைந்தார்

யாழ்ப்பாணம், புதன்

கரையூரைச் சேர்ந்த சைமன் என்பவரின் மரணம்சம்பந்தமாக, விளக்கமறியலில் இருந்துவரும் திருமதி அருளம்மாவின் கணவன் சுப்பிரமணியம், நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் சரணடைந்தார்.

அடுத்த தவணையின்போது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வது பற்றி முடிவு தெரிவிக்குமாறு மாஜிஸ்டிரேட் பொலிஸாருக்கு தெரிவித்தார்.

கணவன் சுப்பிரமணியத்தையும் ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டு இம்மாதம் 23-ம் திகதிவரை வழக்கை ஒத்தி வைத்தார்.

பிஸ்கால் பாதுகாப்பில் இருக்கும் பெற்ரேரை பார்க்க ஆவல்கொண்ட அவர்களின் குழந்தைகள் கோர்ட்டின் வெளிஜன்னல் மூலம் எட்டியெட்டிப்பார்த்த வண்ணமிருந்தனர்.

# ஐயாறன் எழுதுகிறார்

சென்னை 'ஹிந்து' பத்திரிகையில் முதல் பக்கத்திலே ஒரு படத்தைப் பார்த்தேன் மிக மகிழ்ச்சியளித்தது. என்ன படம் தெரியுமா? டில்லியிலே ராஜாஜியும் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும் சந்தித்து அன்புடன் தழுவிக்கொண்ட படம்தான் அது.

சுதந்திராக் கட்சி ஸ்தாபகரான ராஜாஜி, காங்கிரஸ் ஆட்சியை தயவுதாட்சண்யமின்றி வன்மையாகக் கண்டித்துவருகின்ருர். கருத்து வேற்றுமைகள் பல உண்டு. என்ருலும் நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டபோது பிரதமரின் துணிச்சலான நடவடிக்கையைப் பாராட்டி, தமது பூரண ஆதரவைத் தெரிவித்தார் ராஜாஜி. இருவரும் உத்தமமான தேசபக்தர்கள். தியாகசீலர்கள். இந்த நெருக்கடியான சமயத்திலே ராஜாஜியின் யோசனைகளை அரசாங்கம் கேட்டுப் பெருமல் இருப்பதும், அரசாங்கத்தின்மீது அவர் குற்றங்குறைகளைக் கூறிக்கொண்டிருப்பதும் வருந்தத்தக்க விஷயமாகும்.

நேருஜி காலமானபின் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள சோதனை சாதாரணமானதல்ல. புதுசீனம், பாகிஸ்தான் இவற்றின் விரோதம் வளர்ந்துள்ளதேயன்றி குறையவில்லை. இரு முனை யுத்தம்எந்தசமயம் மீண்டும் கிளம்பிவிடுமோஎன்றஆபத்தான நிலை நீடிக்கிறது.

ஜப்பயன்கூட உறுதியளித்த உதவியை நிறுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள்பாதுகாப்பு சபையிலே பாகிஸ்தான் மந்திரி பூட்டோ இந்தியாவை ரசமட்டமாகத் தாக்கிஞர். ரஷ்யாவுள்ளிட்டு ஒருவராவது அதை ஆட்சேபிக்காமல் மௌனமாக இருந்துவிட்டனர். அமெரிக்க உதவிகளும் தாராளமாகக் கிடைப்பதாகத் தெரியவில்லை.

இந்தியாவிலே உணவு நிலைமையும் திருப்தியாக இல்லை. எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் பிறரை நம்பியிருப்பது நல்லதல்லவென்றும் பிரதமரும் காங்கிரஸ்தலைவர் காமராஜரும் பேசியுள்ளனர்.

தேசீய அரசாங்கம் அமைக்காமல், எல்லாக் கட்சிகளும் உண்மையில் ஒத்துழைக்க முடியும்? தேசீய அரசாங்கம் அமைப்பதுபற்றி பிரதமர் சாஸ்திரி கூறுகையில், எதிர்க்கட்சிகள் எதுவும் இதைப்பற்றிக் கேட்கவில்லை என்றும். தேசீய பாதுகாப்பு விஷயத்தில் எல்லாக் கட்சிகளும் ஒத்துழைப்பதாகவும் சொன்னர்.

தேசீய அரசாங்கம் அமைக்க பெரிய கட்சியான காங்கிரஸ்தான் முன்வரவேண்டும். எதிர்க்கட்சிகள் இந்த யோசனையைச்சொல்ல முன்வருமென்று எதிர்பார்ப்பது சரியல்ல. இந்தியாவுக்கு இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி அசாதாரணமானதாகும். இப்போது தேசீய அரசாங்கம் அமைக்காவிடில் பின் எப்போது அமைப்பது? எல்லாக்கட்சிகளுமடங்கிய அரசாங்கத்தை அமைக்ககாங்கிரஸ்தான் முன்வரவேண்டும். அழைப்பு அனுப்பின் பலகட்சிகளும் சேர முன்வரக் கூடும். யாரும் சேர மறுப்பின் அது வேறு விஷயம்.

சிறப்பாக ராஜாஜியின் அனுபவ யோசனைகள் இச்

(8-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழிலிருப்பது போல் வேறு மொழியில் இலக்கியங்கள் இல்லை'

## இலக்கிய விழாவில் எம். பி.

கிளிநொச்சி, திங்கள்

மக்கள் பண்புடையவர்களாக வாழ்வதற்கு இலக்கிய பயிற்சி இன்றையமையாதது வாழ்க்கையை வளம்படுத்துவதற்கு அறிவும்பொருளும் வேண்டியன. ஆனல் இந்த அறிவும் பொருளும் பண்போடு சேர்ந்து தொழில் படாவிடின் அந்த அறிவாலும் பொருளாலும் பயனிலலாமல் போய்விடும்' என்று ஈஸ்வரன் படமாளிகையில் கரைச்சி கிராமச்சபையின் ஆதரவில் நடைபெற்ற இலக்கிய விழாவை தொடக்கிவைத்து பேசுகையில் கிளிநொச்சி எம். பி. திரு. கா பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:

சாகித்திய என்ற சொல்லின் கருத்தையே தெரியாமல் பல கிராமசபைகள் சாகித்தியவிழாகொண்டாடுகின்றன. கரைச்சி கிராமச்சபை நல்ல தமிழில் இலக்கியவிழாவை கொண்டாடுவது போற்றத்தக்கது.

இலக்கியம் என்ற தமிழ் சொல் இருக்க சாகித்தியம் என்ற சொல்லை குருட்டுத்தனமாக பயன்படுத்துவது பேரறியாமையாகும். வருங்காலத்தில் சாகித்தியவிழா என்று கொண்டாடுபவர்கள் அவனை இலக்கியவிழா என்று கொண்டாடவேண்டும்.

மக்கள் உலகத்தில் நல்வாழ்வு வாழவேண்டுமானல் பண்பு நிறைந்த பெரியார்கள் வழி காட்ட வேண்டும். இப்பண்பிலே மக்கள் போற்றத்தக்க முறையில் இலக்கியம், இசை, நாடகம் முதலிய அழகுக் கலைகளை அவர்கள் சுவைத்தற்கேற்ப வாய்ப்புக்கள் நல்கப்படல் வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் இத்துறையில் செயற்பட முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. உலக மொழிகளில் தமிழில் இருப்பது போல் சிறந்த வகையான பல இலக்கியங்கள் வேறு மொழியில் இல்லை, தமிழ் மக்கள் இதனைப் படித்து சுவைக்க முன்வரவேண்டும்.

## மரத்திலிருந்து விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

அரியாலையைச் சேர்ந்த எஸ். பொன்னுத்துரை என்பவர் தென்னைமரத்திலிருந்து விழுந்து மரணமானர்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினர். ஆறுமுகம் துரைராசா சாட்சியமளித்தபோது கூறியதாவது: சம்பவம் நடந்த தினம் மாலை 6 மணிக்கு நான் வீட்டிலிருந்தபோது சத்தம் கேட்டது. ஓடிச் சென்று பார்த்தபோது, காலஞ்சென்றவர் மரத்தின் கீழ் விழுந்து கிடந்தார். நான் அவருக்கு முதலுதவியளித்தேன். பின் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.''

காலமானவரின் மனைவி இராசம்மா சாட்சியமளித்தபோது கூறியதாவது:—

கோயிலுக்குச் சென்றுவிட்டு 2 மணிக்கு எனது கணவன் வீட்டிற்குவந்தார். சாப்பிட்டுவட்டு சிறிதுஒய்வு எடுத்தார். அதன்பின் கள்ளுச்சீவச் சென்றார். மரத்தால் விழுந்துவிட்டதாக இரவு 7 மணிக்கு அறிந்தேன்.''

டாக்டர் எஸ். விக்கினராசா, டாக்டர். எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் சாட்சியமளித்தனர். விபத்தினல் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்

பம்பலப்பிட்டி, செவ்

அடுத்த வருட ஆரம்பத்தில் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் பாலர் வகுப்பில் கல்வி பயிற்ற பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். கிராமப்புறப் பாடசாலைகளிலும், பாலர் வகுப்பில் கல்வி பயிற்ற, பயிற்றப்பட்ட ஆசிரியர்களை நியமிப்பதென கல்விஇலாகா முடிவு செய்துள்ளது.

கிராமப்புறப் பாடசாலைகளில் பாலர் வகுப்புகளில் கல்வி கற்பிக்க பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லாமையாலேயே அங்குள்ள மாணவர்களின் பெற்றேர்கள் தங்கள் பிள்ளைகளைக் கொழும்பிலுள்ள பாடசாலைகளில் சேர்க்க விரும்புகின்றனரென்பது தெரியவந்துள்ளது. அடுத்த வருட ஆரம்பத்தில் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் 2,600 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நாடு பூராவும் உள்ள பாடசாலைகளில் நியமிக்கப்படுவர்.

## நிரந்தரக் காரியதரிசியுடன் பேட்டி

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்புக்குக் கடந்த வார இறுதியில் விஜயம் செய்த கல்விமந்திரியின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஜே. பெரேராவை கிழக்கிலங்கை தமிழ் ஆசிரிய சங்க உறுப்பினர்கள் டீ. எஸ். கே. வணசிங்கா தலைமையில் மட்டக்களப்புக் கல்விக்காரியாலயத்தில் வைத்துப் பேட்டி கண்டு ஆசிரியர்களுடைய பிரச்னை பற்றி ஒரு மகஜரை நிரந்தரக் காரியதரிசியிடம் சமர்ப்பித்தனர். மகஜரில் குறிப்பிட்ட பிரச்னைகள் குறித்து தான் கவனம் எடுப்பதாக அவர் உறுதி அளித்தார்.

6 மாத நீடிப்பு

## கேரளத்தில் ராஷ்டிரபதி கட்சி

புதுடில்லி, நவ.8

கேரளத்தில் ராஷ்டிரபதி ஆட்சியை மேலும் 6 மாதம் நீடிக்க லோகசபை அங்கீகாரம் அளித்திருக்கிறது. ஏற்கனவே ராஜ்யசபை இதற்கு அங்கீகாரம் அளித்துவிட்டது.

## ராக்கெட் நிபுணருக்கு தங்கப்பதக்கம்

நூரம்பர்க். நவ. 9

ராக்கெட் அபிவிருத்தி, வான ஆராய்ச்சி ஆகிய துறைகளில் ஆற்றிய சேவைக்காக டாக்டர் வேன்ஹர் வொன்பிரானுக்கு ஜெர்மன் கண்டுபிடிப்பாளர் சங்கத்தின் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. ஜெர்மனியில்பிறந்த ராக்கெட் நிபுணரான டாக்டர் பிரான் தற்போது சனிக்கிரகத்தை நோக்கிச் செலுத்தப்படவிருக்கும் அமெரிக்க முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால், இப்பதக்கத்தைப் பெறுமுகமாக அவர் நேரடியாக ஜெர்மனிசெல்ல முடியவில்லை.

பி. டி. ஸி.

## "இளைஞர் மன்றம் தேவை"

மீசாலை, செவ்.

'சாணேறமுழஞ்சறுக்கும்' என்ற முதுமொழி சைவ வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் பொருத்தமற்றதாகிவிட்டது. சேர் கந்தையா வைத்தியநாதன் போன்ற சைவப் பிரமுகர்களின் திடீர் மறைவினல் சைவசமய வளர்ச்சி சாண் ஏற பாகஞ்சறுக்கும் நிலைமையை அடைந்துவிட்டது. சைவ இளைஞர்கள் கட்டுக்கோப்பான முறையில்இந்து இளைஞர் மன்றம் என்ற கொடியின்கீழ் திரண்டு தொண்டாற்றினல் ஓர் அளவுக்குத்தானும் ஈடுசெய்ய முடியும்.'' இவ்வாறு தென்மராட்சி சைவ மகாசபைச் செயலாளர் திரு. ஆர் ரி. சுப்பிரமணியம் சங்கத்தானை மீனாட்சி அம்மன் சந்நிதானத்தில் நடத்தப்பெற்ற சைவசமயிகளின் மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினர்.

பண்டிதர் திரு. த. சுவாமிநாதன் ''மணிவாசகர் மாண்பு'' என்னும்பொருள் பற்றி உரையாற்றினர். சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவ மாணவியரும் சமயப் பிரசங்கங்கள் செய்தனர். திரு. வி. சின்னத்துரையின் நன்றிபுரையுடன் கூட்டம் நிறைவுற்றது

## அதிகாரி-டாக்டர்கள் கருத்து வேற்றுமை

பம்பலப்பிட்டி, செவ்.

கொழும்பு கண்ணாஸ்பத்திரியில் விபத்துகளுக்கு எந்த விதமான சேவையை ஏற்படுத்துவதென்பதில் கொழும்பு வட்டார ஆஸ்பத்திரிகளின் அதிகாரிக்கும், கொழும்பு பெரியாஸ்பத்திரி வைத்திய நிபுணர்களுக்குமிடையில் கருத்துவேற்றுமை நிலவுகிறது.

சுகாதாரமந்திரி திரு. எம். டி. ஏச். ஜெயவர்த்தன கொழும்பு பழைய கண்ணாஸ்பத்திரி கட்டடங்களைப் பார்வையிட்டபோது, கருத்து வேற்றுமை காணப்படக்கூடிய விதத்தில் டாக்டர்கள் தமது கருத்துக்களை மந்திரிக்குத் தெரிவிததனர்.

விபத்துக்கள்சேவைக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு 1966 ஜனவரியில் அப்பிரிவு இயங்குமென்று தெரிவித்த சுகாதார மந்திரி, விபத்துக்கள் சேவை எப்படி அமையவேண்டுமென்பதைக் கண்காணிப்பதற்கு ஒருகமிட்டி நியமிக்கப்பட்டுள்ளதென்றும், அதன்முடிவின்படி விபத்துக்கள் சேவைப்பிரிவு அமைக்கப்படுமென்றும் சொன்னர்.

## டில்லியில் ரஷ்ய உதைபந்தாட்ட வீரர்

புதுடில்லி, நவ. 9

இந்தியாவில் 4 வாரம் பல விளையாட்டுக்களில் கலந்து கொள்ளும்பொருட்டு ரஷ்ய உதைபந்தாட்டக் கோஷ்டி ஒன்று நேற்று டில்லி வந்தது. இதில் 25 பேர் இருக்கிறார்கள்.

## கயரோக தடுப்பு பிரசாரக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை கயரோகத் தடுப்புச்சபையின் யாழ்ப்பாணக் கிளையினர் நாளை மாலை யாழ்ப்பாண மத்திய கல்லூரி மண்டபத்தில் கயரோகத் தடுப்புப் பிரசாரக் கூட்டம் ஒன்றினை நடத்தவிருக்கின்றனர்.

இலங்கை கயரோக தடுப்புச் சபைத் தலைவர் டாக்டர் எஸ். ராஜசூரியர் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் டாக்டர் எஸ். ராஜசூரியர், திரு. டி. பி. எலிபொல ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

# பெருவாரி · இடமாற்றத்துக்கு ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், புதன்

ஆசிரியர்களை பெருமளவில் இடமாற்றம் செய்யும் அரசாங்கத்தின் திட்டத்தை வடமாகாண ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன், இடமாற்றச் சபையில் பெரிய தொழிற் சங்கங்களுக்கு பிரதிநிதித்துவம் தெரிவிக்கப்படாதது பற்றியும் கண்டனம் தெரிவித்துள்துது.

ஆசிரியர்கள் பரிபூரணமான அரசாங்க உத்தியோகத்தர்கள் இல்லையாதலால் அளர்களை இடமாற்ற சேவைக்குட்பட்டவர்கள் எனக் கருதக்கூடாதெனவும், காலத்துக்குக்காலம் செய்யப்படும் இந்த இடமாற்றத்தால், இடமாற்ற அச்சத்தால் ஆசிரியர் பிரச்னைகளின் நலனைக் கருதாதிருக்க இடமுண்டு என்றும், எங்கு ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்களோ அங்கு புதிய நியமனங்கள் செய்யப்படவேண்டுமென்றும் நேற்று முன்தினம் நடைபெற்ற சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தைத்தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரிய தொழிற் சங்கங்களுக்கு இடமாற்ற சபையில் பிரதிநிதித்துவம் அளிக்காதது பாரபட்சம் காட்டுவதாக உள்ளதெனவும், தொழிற் சங்கங்களுக்கு ஊக்கமளிக்கப்படும் என்ற அரசாங்கத்தின் கொள்கையில் ஆசிரியர்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதெனவும் அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடமாற்றப் பிரச்னையை விரைவில் தீர்க்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

ஆசிரியர்கள் இடமாற்றம், மலைநாட்டுப் பாடசாலைகளின் பரிதாபநிலை, பதவிஉயர்வு, மூதுமுறை அட்டவணை ஆகியவை சம்பந்தமாக அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர்சங்கம், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், வடஇலங்கைத் தமிழாசிரியர்சங்கம் ஆகிய ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளுக்கிடையேயும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையேயும் இம்மாதம் 2-ம், 3-ம் திகதிகளில் நடைபெறற பேச்சுவார்த்தைகளை நினைவுபடுத்தி அ. இ. அ. பா. த. ஆ. சங்கம் தமிழ் எம். பி.க்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளது. இப்பிரச்னைகளுக்கு சுமுகமான தீர்வுகாண விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு எம். பி.க்களைக் கோரும் இக்கடிதத்தில் பின்வரும் சிபார்சுகளையும் குறிப்பிட்ட ஆசிரியர்சங்கம் தெரிவித்துள்ளது.

வெளியிடங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளின் காலியாகவுள்ள இடங்கட்கு 1-1-66ல் வடமாகாணத்திலுள்ள மேலதிக ஆசிரியர்களை (சேவை அடிப்படையில்) மாற்றுவதன்மூலம் அப்பாடசாலைகளின் கல்வி நலன் பாதுகாக்கப்படல் வேண்டும். வெளி மாகாணங்களிலும், கஷ்டமான இடங்களிலும் நீண்டகாலம் சேவை செய்யும் ஆசிரியர்கட்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சேவை அடிப்படையில் ஒரு தொகையினர் 1-1-66ல் சொந்த இடங்கட்கு மாற்றப்படவேண்டும். இதனல் ஏற்படும் காலியான இடங்கட்கும் தேவையான அளவு யாழ்ப்பாணப் பகுதியில் சேவை கூடிய அடிப்படையிலிருந்து மாற்றப்படவேண்டும். இப்படி மாற்றப்படும்போது 50 வயதுக்கு மேற்பட்டவர்கள், 30 வயதிற்கு உட்பட்ட விவாகஞ் செய்யாத பெண்கள், மாற்றத்திற்கு அருகதையற்ற உத்தியோகஸ்தரின் மனைவிமார், கொள்கை அடிப்படையில் வெளிமாகாணங்களிலிருந்து நீண்டகாலச் சேவைக்குப் பின் சொந்த இடங்கட்கு மாற்றப்பட்டவர்கள் ஆகியோருக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும்.

வெளி மாகாணப் பாடசாலைகளில் வேறினப் பாடசாலைகளுடன் இணைந்துள்ள தமிழ்ப் பிரிவுகட்கு உடனடியாகத் தமிழ் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். அவ்வப் பிள்ளைகளின் சராசரிக்கு ஏற்ப ஆசிரியர்கள் இருக்க வேண்டும். 21-7-65ல் கல்வி மந்திரியைப் பேட்டி கண்டபோது இவ்விடயத்தை ஏற்றுக் கொண்டார்.

வெளி மாகாணங்கட்கு மாற்றப்படும் ஆசிரியர்கள் 5 வருட எல்லையில் சொந்த மாகாணத்திற்கு மாற்றப்படுவார் என்ற உறுதித்திட்டத்தில் அமைய வேண்டும். அத்திட்டத்திற்கமைய மாற்றப்பட்டுள்ளார் என்ற குறிப்பு மாற்றக் கட்டளையில் அமைந்தால் ஆசிரியர்கட்குப் பாதுகாப்பாகவும், சென்றல் திரும்ப முடியாது என்று ஏங்கும் நிலையைத் தவிர்ப்பதாகவும் முடியும். அத்துடன் கஷ்டமானஇடங்களில் சேவை செய்வோருக்கு சகாயப்பணம் வழங்கும் யோசனையைச் செயல்படுத்த வேண்டும்.

## கூழாவடி கொலைவழக்கு

யாழ்ப்பாணம், புதன்

கூழாவடி கொலை வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட்கோட்டில் நீதிபதி ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் நேற்றுக்காலைமீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதிகதிரவேலு காளிமுத்து என்பவர் கூழாவடியில் திருமதி ராஜமார்த்தாண்டனை கொலைசெய்ததாகவும், திருமதி தேவராசனை கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிக்காக எவரும் ஆஜராகவில்லை. இறந்தவரின் நலனைக் கவனிக்கும் பொருட்டு புறக்டர் ஜிம்மி ராஜரத்தினம் ஆஜரானர்.

காளிமுத்து வெள்ளைச்சாரமும், வெள்ளைச் சேட்டும் அணிந்து வந்திருந்தார்.

ஆசிரியர் எஸ். பாலகிருஷ்ணன் சாட்சியமளித்தபோது, தான்காலஞ்சென்ற தமயந்தியின் மைத்துனரென்றும், மரணவிசாரணையின்போது, சடலத்தை அடையாளம் காட்டியதாகவும் கூறினர்.

கேள்விகேட்க விரும்புகிறீரா? என்று எதிரியை மாஜிஸ்திரேட் கேட்டபொழுது இல்லையென்று பதிலளித்தார். கான்ஸ்டபிள் குணரத்ன சாட்சியமளித்தபோது சம்பவம் நடந்த இடத்தில் எடுத்த பொருட்களை பரிசோதனைக்காக அனுப்பிவைத்ததாகக் கூறினர்.

இம்மாதம் 23-ம் தேதி வரை விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# "ஆசிரியர் இடமாற்றம் கல்வியை பாதிக்கும்"

யாழ்ப்பாணம், செவ். "ஆசிரியர்கள் மாணவர்கள் சூழலையும் தேவையையும் நன்கு அறிந்தவர்களாக இருத்தல்வேண்டும். ஒரு ஆசிரியர் ஒரு மாணவனையும் அவனது சூழலையும் அறிய பலகாலம் செல்லும். பலகாலம் ஒரே இடத்தில் படிப்பிக்கும் ஆசிரியரிடம் மாணவர்களுக்கு பக்தி ஏற்படுகிறது. ஆசிரியனும் அப்போதுதான் மனநிம்மதியுடன் தமது கடமையை ஆற்றமுடிகிறது. வருடத்துக்குப் பலமுறையோ அடிக்கடியோ ஆசிரியர் இடமாற்றம் நிகழக்கூடாது. பொதுவாகவே ஆசிரியர் இடமாற்றம் மாணவர்கள் கல்வியை மிகவும் பாதிக்கும் என்பது எனது சொந்த அபிப்பிராயமாகும்."

மேற்கண்டவாறு உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலையில் 35 ஆண்டுகள் கல்வி கற்பித்து பதவி உயர்வுடன் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பிரதம பகுதித் தலைமையாசிரியராக சென்றுள்ள பண்டிதர் திரு. நீ. சி. முருகேசுவை கௌரவிக்கும் முகமாக சந்திரோதய பழைய மாணவர் சார்பில் நடைபெற்ற சேவை நலம் பாராட்டுவிழாவில் பண்டிதர் முருகேசுவினது உருவப்படத்தை திறந்து வைத்துப்பேசுகையில் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை குறிப்பிட்டார்.

அநுராதபுரம் வித்தியாதியா கந்தோர் கணக்காளர் திரு. மு. பசுபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கோப்பாய்ப் பிரதிநிதி தொடர்ந்து பேசுகையில், பண்டிதர் திரு. முருகேசு 35 ஆண்டுகள் உரும்பராயிலிருந்து சேவையாற்றி மக்கள் மனதில் அப்படியே பதிந்துவிட்டார் என்றும திரு. முருகேசுவும் அடிக்கடி மாற்றத்துக்குள்ளாகியிருந்தால் இந்த நாட்டுக்கு இப்படியானதொரு சிறந்த சேவையைச் செய்திருக்க முடியாது" என்றும் குறிப்பிட்டார்.

நாதஸ்வர இசையுடன் உரும்பராய் இந்துக்கல்லூரியிலிருந்து பண்டிதர் முருகேசு ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார். பாராட்டுபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. வட்டார வித்தியாதரிசி என். ஆர். பாலசிங்கம் வாழ்த்துரை வழங்கினார். சைவபரிபாலன சபைக் காரியதரிசி திரு. ஆ. தனபாலசிங்கம் பண்டிதர் நீ. சி. முருகேசுவினது சேவையைப்பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

திருவாளர்கள் க. சுப்பிரமணியம். சி. பொன்னுத்துரை, கா. கந்தசாமி, ம. வைத்தியலிங்கம், க. இ. குமாரசாமி, அ. வைத்தியலிங்கம, தி. முருகேச பிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். ஈற்றில் திரு. முருகேசு பதிலுரை கூறினார்.

## ஐ. நா. மகாநாட்டில் இலங்கை பேராசிரியர்

பம்பலப்பிட்டி, செவ். இம்மாதம் 11-ந் திகதி தொடக்கம் 19-ந் திகதி வரையும் லண்டனிலுள்ள ஆக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகத்தில் ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார ஸ்தாபனம் நடத்தும் மனிதஉரிமை பற்றிய மகாநாட்டில் இலங்கைப் பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர் கலந்து கொள்கிறார். 'இலங்கையிலும் தென் ஆசியாவிலும் நில உரிமை மாறுதல்கள் என்னும் பொருள்பற்றி பேராசிரியர் டாக்டர் ஜோர்ஜ் தம்பையாபிள்ளை மகாநாட்டில் அறிக்கை சமர்ப்பிப்பார்.

## தபால், தந்தி உத்தியோகத்தர் கூட்டம்

வவனியா, திங்கள் தபால் தந்தி உத்தியோகத்தரின் வவனியாக் கிளையின் பொதுக்கூட்டம் நேற்று மாலை வவனியா பொழுதுபோக்குச் சங்க மண்டபத்தில் தபாலதிபர் திரு. க. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்கலந்துகொண்ட வவனியா தபால் அதிபர் சங்கத்தின் காரியதரிசி திரு. சிவயோகம், கிளிநொச்சி உபதபால் நிலையத்தை தபால்நிலையமாக உயர்த்த வேண்டுமென்றும் முறிகண்டி உபதபால் நிலையத்துக்கு நேரடி தந்தி, தொலைபேசித் தொடர்பு உண்டாக்கவேண்டுமென்றும் கோரும் பிரேரணைகளைக் கொண்டுவந்தார். திரு. சிவலோகநாதன் பிரேரணைகளை ஆமோதிக்க, பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறின. இப்பிரேரணைகள் மந்திரிக்கு தந்திமூலம் அனுப்பப்பட்டன.

## சிங்கப்பூர்

சிங்கப்பூர், நவ. 9 சிங்கப்பூர் பிரிட்டனிடமிருந்து மட்டுமே ராணுவ உதவி பெறும் என உதவிப் பிரதமர் சின் சீ கூறினார்.




GC/20

## இருதயக் கோளாறினுல் மரணம்

யாழ்ப்பாணம், செவ் யாழ்ப்பாணம் தேர்தல் கந்தோரில் கடமையாற்றிய நல்லூரைச் சேர்ந்த டபிள்யூ. ஏ. விஸ்வலிங்கம், இருதய கோளாறு காரணமாக மரணமடைந்தார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணைநடத்திஞர். திரு. கி. அருணகிரிநாதர் சாட்சியமளித்தபோது கூறியதாவது:-காலமானவர் என்னுடன் கடமையாற்றினர். சிலகாலத்தின் முன் அவர் சுகவீனமுற்ருர். சம்பவம் நடந்ததினம் காலை 9 மணிக்கு அவர் கந்தோருக்கு வந்தார். காலை 10-45 மணிக்கு இருவரும் தேநீர் அருந்திவிட்டு, வந்தபோது அவர் நெஞ்சிலும் இடது கை மூட்டிலும் வலிப்பதாக கூறிஞர். அவரை மற்றவர்களின் உதவியுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோது அங்குமரணமாஞர்.

டாக்டர் பி. இரத்தினசபாபதி சாட்சியமளித்தபோதுகாலஞ்சென்றவருக்கு இருதயக்கோளாறும் ஆஸ்த்மாவும்இருந்ததாக கூறிஞர்

இருதயக்கோளாறிஞல்ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

போன்-7213
பெட்டா பார்மஸி
ஆங்கில மருந்துகளுக்கு
23, டாம் வீதி, கொழும்பு - 12

## மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி

மட்டக்களப்பு, செவ்.

மட்டக்களப்பு மாவட்ட தேசிய பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப்போட்டி சென்ற வார இறுதியில் நடைபெற்றது. கல்விமந்திரியின் நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ஜே பெரேரா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இவ்விளையாட்டு விழாவுக்கு கிழக்குப் பிராந்திய உதவிக் கல்விப் பணியாளர் திரு. எல். ஆர். பெரேரா தலைமை வகித்தார்.

போட்டியில் கலந்து வெற்றியீட்டிய மாணவிகளுக்கு நிரந்தரக் காரியதரிசி பரிசில் வழங்கிஞர்.

போட்டியில் வெற்றி பெற்று வெள்ளிக்கிண்ணங்களையும் கேடயங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு:-

எல்லா விளையாட்டுக்களிலும் பங்குபற்றி வெற்றிவீரஞக வாழைச்சேனை அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தைச்சாநதஏ. முகைதீன தெரிவுசெய்யப்பட்டார். வீராங்கனையாக காத்தான்குடி 5-ம் குறிச்சி அ. த. க. பாடசாலையைச் சேர்ந்த எம். காசரு தெரிவு செய்யப்பட்டார்.

மத்திய பிரிவு வீரஞக மாங்காடு அ. த. க. பாடசாலையைச் சேர்ந்த செ. ரத்தினசிங்கம் தெரிவுசெய்யப்பட்டார்.

மத்திய பிரிவு வீராங்கனையாக கழுதாவளை அ. த. க. பாடசாலையைச் சேர்ந்த என். லெட்சுமி தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த வீராங்கனைக்குரிய வெள்ளிக் கிண்ணத்தைச் செல்வ. கோசரியும் சிறந்த வீரனுக்குரிய பரிசை எம். கனகசூரியமும், ஆறுமுகமும் பெற்றுக் கொண்டனர். போட்டி முழுவதிலும் கலந்து அதிகப்படியான புள்ளிகளைப்பெற்ற கோட்டமுனை ரே. க. பெண்பாடசாலை வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்தது.

முதலாவது இடத்தை வடக்கு வட்டாரம் பெற்று அதற்குரிய வெற்றிக் கேடயத்தை வடக்கு வித்தியாதரிசி உயர்திரு. கனகசபை பெற்ருர்.——

## விக்டோரியா வெற்றி

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஆசிரியர்கள் கோஷ்டிக்கும் நெல்லியடி மகாவித்தியாலய ஆசிரியர்கள்கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற இப்போட்டியில் விக்டோரியா வெற்றிபெற்றது. விக்டோரியாக் கல்லூரியைச் சேர்ந்த திரு. எஸ். எஸ். இரத்தினசபாபதி சிறப்பாக விளையாடி மூன்று கோல்கள் போட்டார். நெல்லியடிக் கோஷ்டி இரு கோல்கள் போட்டது. திரு. அருளையா இவற்றை அடித்தார்.

## சண்டிலிப்பாய் வெற்றி

உரும்பராய், செவ்.

உரும்பராய் ''லைவன் லையன்ஸ்'' கோஷ்டிக்கும் சண்டிலிப்பாய் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் சண்டிலிப்பாய்கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றி பெற்றது.

உரும்பராய் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. சுகுமாரன் மத்தியஸ்தம் வகித்தார்.




### கொழும்பு

**புதன் 10 - 11 - 65**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 படப் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை.

எனக்கு
மிகவும்
பிரியமானது



CEYLON CHOCOLATES LTD
கன்டொஸ்
உயர்ந்த ரகச் சொக்கலேற்று




ஏகவிநியோகஸ்தர்கள்:
ஷோ வலஸ் அன் ஹெஜெஸ் லிமிட்டெட்,
கொழும்பு - 3.

RAVI-CCL

உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான
"வைத்திலிங்கம்ஸ்"
இரும்பு - பித்தளை மரஸ்குறூறு
ஆணிகளை
நீங்கள் வாங்குவதிஞல்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.
தயாரிப்பாளர்கள்:-
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழையசோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 7143 — 2029
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

# "வள்ளலுக்கு இலக்கணமாக விளங்கும் பெரியார்"

## திரு. கனகசபை ஜே. பி. க்கு பாராட்டு

யாழ்ப்பாணம், செவ். 'தமிழுக்கும், சைவத்திற்கும் நாட்டு நன்மைக்கும் நெடுங்காலமாக அயராது உழைத்து, வரையாது கொடுத்து வரும், பெரியாரை பாராட்டும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நேற்று மாலை வண்ணை ஐக்கிய லாபநிதி சிருப்பர் திரு. சு. கனகசபை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதற்காக நடந்த பாராட்டு விழாவிற்கு தலைமைதாங்கிய, வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் மேற்கண்டவாறு கூறினர்.

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி மண்டபத்தை வந்தடைந்தது. கடைகள் தோறும் வீடுகள் தோறும் பூரண கும்பம் வைத்து கொடைவள்ளலுக்கு மாலை சூட்டினுர்கள்.

ஆசிரியர் திரு. ஆறுமுகம் வரவேற்பு பத்திரம் வாசித்தளித்தார்.

தலைவர் மேலும் கூறியதாவது:- ஒருவரின் குறை நிறை அயலில் உள்ளவர்களுக்குதான் தெரியும், பல காலமாக அவரிடம் பழகியதிலிருந்து, அவரின் கொடை தன்மையை அறிவேன். இப்பாடசாலைக்கு பலமுறை உதவி வழங்கியுள்ளார். கைராசியுள்ளவர். பள்ளிக்கூடம் வளரவேண்டும் என்ற அக்கறையுடையவர். அன்புள்ளம் கொண்டவர்.

உருத்திரபுரத்தில், சிவாலயம் இருந்த பகுதி வேறுபேரிடம் சிக்கிய பொழுது மீண்டும் நிலத்தை எடுத்த பொழுது, திரு. கனகசபை தானே சிவாலயத்தை கட்டி முடிக்கும் திருப்பணியை ஏற்றுக் கொண்டார். மாவிட்டபுரம் கோவிலுக்கு பெருந்தொகையான பணத்தை வாரிவழங்கியுள்ளார். நல்லூர் கந்தசாமி கோவிலிலுள்ள கயிலாயவாகனம், அவரின் முயற்சியால் உருவாக்கப்பட்யது. தான்பிறந்த ஊரில் பாடசாலைகட்டி பல வசதிகள் செய்து கொடுத்துள்ளார். மற்றவர்களுக்கு தெரியாது செய்த பணி ஏராளம். ஆஸ்பத்திரி, ஆலயம், பாடசாலை, பற்பல சங்கங்களுக்கு தாராளமாக வழங்

பிரம்மஸ்ரீ மணிபாகவதர் பேசும்போது கூறியதாவது: "கொடைகளில் பலவகைகள் உண்டு மனதில்வேறுப் போடும் முகத்தில் சிரிப்போடும் கொடுப்பார் சிலர். வந்துவிட்டார்களே கொடுக்கத்தானே வேண்டும் என்று கொடுப்பவர் சிலர். சிந்தியாமல் கொடுப்பவர் சிலர். ஆனல் வள்ளல் கனகசபையில் நான் கண்ட சிறந்த குணம், அவர் சிந்தித்து சிறந்த காரியத்துக்கென்ருல் தாராளமாக வழங்குவார்.

வித்துவான் பொன் முத்துக்குமாரன் பேசுகையில் கூறியதாவது: முற்காலத்தில் வள்ளல்கள் உண்டென சங்கநூல்கள் சாற்றுகின்றன. இக்கால மக்களில் சிலர் இவை பொய்யுரையென்றும், புனைந்துரையென்றும் கூறுவார்கள். அப்படி தவருக நினைக்காமல், வள்ளல் பரம்பரை தமிழ் நாட்டில் மறையாமல் இருக்க திரு. கனகசபைவாரி வழங்கி வருகிருர்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசும்போதுகூறியதாவது: 'இலக்கியங்களில் நாம் பல வள்ளல்களை கண்டிருக்கிறோம். தற்பொழுது வள்ளல் கனகசபையை கண்முன்னே காண்கிறோம். வள்ளல் கனகசபையினுல் சைவமும் தமிழும் செழித்தோங்குகிறது. அன்பு, சேவை, தியானம் ஒருமித்து செல்லும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை. இம்மூன்று தன்மைகளும் பெரியார் வாழ்வில் அமைந்துள்ளது'

திரு வி. க. ஆறுமுகம் பேசும்போது சமாதான நீதவான் பட்டம் தற்பொழுது பலருக்கும் வழங்கப்படுவதாகவும், வள்ளல் கனகசபைக்கு இப்பட்டத்தை வழங்கியதன் மூலம், பட்டத்தின் பெறுமதி கூடியுள்ளதாகவும் தெரிவித்தார்.

திரு எஸ். இராசரத்தினம் பேசும்போது: வள்ளல்கனகசபைக்கு தகுந்த அரசாங்கத்தால் பட்டம் வழங்கப்பட்டிருப்பதாகவும், தகுந்தவர்களால் பாராட்டு வழங்கப்படுவதாகவும் கூறினர்.

திரு. த. சோமசுந்தரம் பேசும் போது: வள்ளல் சைவத்திற்கு மட்டுமன்றி, கிறிஸ்தவ, முஸ்லீம் நிலையங்களுக்கும் நன்கொடை வழங்கியிருப்பதாகக் கூறினர்.

செல்வன் ச. செந்தில் ராசாவும் பாராட்டுரை வழங்கினர்.

திரு சு. கனகசபை, பாராட்டுரை வழங்கியவர்களுக்கும் பாராட்டு விழ வில் கலந்து கொண்டவர்களுக்கும், நன்றியை தெரிவித்துக் கொண்டார்.


கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)

தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

"நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்"

எம். ஜி ஆர். — சரோஜாதேவி

(இருவேடங்களில்)

ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி விஜயலக்ஷ்மி

நடித்த



விஜயா கம்பைன்ஸ்

எங்கவீட்டுப் பிள்ளை

(ஈஸ்மென்கலர்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

போர்நிறுத்தத்திற்குபின்

# 630 இந்தோ - பாக் வீரர் பலி

புதுடில்லி, நவ. 8

போர் நிறுத்தத்திற்குப் பின் ஏற்பட்ட கைகலப்புகளில் கடந்த வெள்ளிக்கிழமை வரை 378 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர் என்றும், 252 இந்திய வீரர்கள் பலியாகினர் என்றும் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் அறிவித்தார்.

இதுவரை மொத்தம் 2212 இந்திய வீரர் கொல்லப் பட்டனர் என்றும் 7600-க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் திரு. சாவன் கூறினர் காயமடைந்த 2000 பேர் ஏற்கனவே மீண்டும் ராணுவத்திற்குத் திரும்பி விட்டதாயும் அவர் தொடர்ந்து கூறினர்.

# பாகிஸ்தானுக்கு ஆயுதசப்ளைஇல்லை

வாஷிங்டன், நவ. 8

பாகிஸ்தானுக்கு, அமெரிக்கா ஆயுத சப்ளையை நிறுத்தியிருப்பதுடன் நேட்டோ செண்டோ, சீட்டோ நாடுகளையும் பாகிஸ்தானுக்கு ஆயுதசப்ளை செய்யவேண்டாமென கேட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அமெரிக்கா இந்த உறுதியை இந்தியாவுக்கு அறிவித்திருப்பதாய் வெளிநாட்டு மந்திரி சுவர்ண்சிங் எழுத்து மூலம் அறிவித்த பதிலில் தெரிவித்தார்.

கிண்ணியா பட்டினசபைத் தேர்தல்

# யு. என். பி. அபேட்சகர்களுடன் எம் பி. உட்பட 8 சுயேச்சைகள் போட்டி

திருக்கோணமலை, செவ். கிண்ணியா, பட்டினசபை அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டதற்குப் பின்னர் நடைபெறும் முதலாவதுபொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை நேற்றுக் காலை திருக்கோணமலை மாவட்ட உதவித் தேர்தல் அதிகாரி திரு. எஸ் என். இராஜா கிண்ணியா பட்டினசபை மண்டபத்தில் வைத்து ஏற்றுக் கொண்டார்.

4-ம் வட்டாரத்தில் மூதூர் இரண்டாவது பாராளுமன்றப் பிரதிநிதி ஜனுப் ஏ. எல். அப்துல் மஜீது சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடுகின்ருர். அவருடன் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகராக ஜனுப். எஸ். அப்துல் சமது என்ற தொழிலாளி போட்டியிடுகின்ருர். ஆறு வட்டாரங்களிலும் ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகர்களுக்கும் சுயேச்சை அபேட்சகர்களுக்கும் இடையே நேரடிப்போட்டி நடைபெறுகின்றது. ஒரு வட்டாரத்தில் இரு சுயேச்சை அபேட்சகர்கள் மட்டுமே போட்டியிடுகின்றனர். நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்தவர்களின் முழு விபரம் வருமாறு:

1-ம் வட்டாரம்: ஜனுப். எம். ம். இஸ்மாயில் (சுயேச்சை) ஜனுப். எம். ஏ. ஜபார் (ஐ. தே. க).

2-ம் வட்டாரம்: ஜனுப். டி. ஆமாத்து (ஐ. தே. க), ஜனுப். எஸ். ஏ. முத்தலிபு (சுயேச்சை).

3-ம் வட்டாரம்: ஜனுப் பி. ஏ. கரீம் (சுயேச்சை), ஜனுப். கே. ஏ. லத்திப் (ஐ. தே. க.).

4-ம் வட்டாரப்: ஜனுப் ஏ. எல். ஏ. மஜீத் (எம். பி) சுயேச்சை, ஜனுப் எஸ். அப்துல் சமது (ஐ. தே. க)

5-ம் வட்டாரம்: ஜனுப் எம். எம், இப்ராஹிம் - சுயேச்சை. ஜனுப் எம். யாக்கூபு - சுயேச்சை.

6-ம் வட்டாரம்: ஜனுப் ஏ. எஸ். எம். ஹனிபா - யு. என். பி.; ஜனுப் எம். ஐ. எச். பக்கீர் ஆசீன் - சுயேச்சை.

7-ம் வட்டாரம்: ஜனுப் எல். இ. எச். மஹ்ரூப் - யு. என். பி.; ஜனுப் ஏ. சி. எல். எம். அவுது ஹாஜியார் - சுயேச்சை.

# ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சமயம் மிகவும் பயன்படுவதாக இருக்கும் காங்கிரஸ் தலைவர் காமராஜரின் கருத்து என்னவோ! டில்லியிலே ராஜாஜியும்சாஸ்திரியும் சந்தித்து அன்புடன் அளவளாவியுள்ளது' ஒரு நல்ல அறிகுறி. இனி தேசிய அரசாங்கம் சீக்கிரம்அமைக்கப்படுமா? ராஜாஜியின் பூரணஒத்துழைப்பும் யோசனையும் கிடைக்க முடியுமாயின் காங்கிரஸ் ஆட்சியின் மண்டையிடி குறைவதுடன் இந்தியாவுக்கும் அது பல விதங்களிலும் நன்மையாகும்.

ஃ

சென்றவாரம் கொழும்பு தமிழ்-முஸ்லீம் பள்ளிக்கூடங்களின் கலைவிழாவைக் கண்டேன். இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவ மாணவிகள் மதவேற்றுமையின்றி ஒரே மேடையில் கூடி கலைவிருந்தளித்தனர். ஒரு கத்தோலிக்க சிறுவன் விபூதி ருத்திராட்சமணிந்து பட்டுக்கட்டி மற்றவர்களுடன் சேர்ந்து காவடி ஆட்டத்தை மிக உற்சாகமாக ஆடியது குறிப்பிடத்தக்கது. கலை மூலம் தமிழரிடை ஒற்றுமை வளருவதைக் காணக்கூடியதாக இருந்தது.

சுமார் 5 மணி நேரம் நடைபெற்ற இந்த விழாவுக்கு, தற்காலிகக் கல்வி மந்திரி காமினி ஜெயசூரியா தலைமை வகித்து பல நடன நிகழ்ச்சிகளையும் ரஸித்துப் பாராட்டினர்.

ஃ ஃ ஃ

ஐந்து செம்முகங்களுடன் கூடிய ஸ்ரீ விநாயகரின் விக்கிரகப்பிரதிஷ்டை கொழும்பு செட்டியார்தெரு ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. கவர்ச்சிமிக்க இந்த விக்கிரகத்தை யாழ்ப்பாணம் ராமகிருஷ்ணனின் புதல்வர் நன்கு வார்த்துள்ளது பாராட்டத்தக்கதாகும்.

ஃ ஃ ஃ

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு
அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள்
எம்மிறை ஈசனை
நண்ணறியாமல் நழுவு-
கின்ருரே.
—திருமூலர்.

# மூவரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ரி. ஜே. ராஜரத்தினம் நேற்றுக் காலை மரணவிசாரணை நடத்தினர்.

மரணவிசாரணையின் போது யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்ரின்டன்ட் திரு. இடமல்கொட, தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. சொலமன், குற்றப்பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சௌந்தரநாயகம் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். காலஞ்சென்றவரின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு புரக்டர் திரு. தளையசிங்கம் யோகநாதன் ஆஜராகியிருந்தார்.

மரணவிசாரணையின் போது, மகேந்திரன் பட்டரி சேவிஸ் மனேச்சர் பரமேஸ்வரசர்மா, குலசிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இரத்தினம், சுப்பிரமணியம், சண்முகம்ஆகியோர்ஒரு மோட்டார் காரில் வந்ததாகவும்இரத்தினம் என்பவர் சுட்டபோதுதெய்வேந்திரம்காயமடைந்து விழுந்து பேச்சுமூச்சின்றிக் கிடந்ததாகவும்மரணவிசாரணையில் கூறப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிசார் புலன் விசரணை செய்து வருகிருர்கள்.

# கொழும்பு ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அபேட்சகராகப் போட்டியிட்டு யு. என். பி. யில் இப்பொழுது சேர்ந்துள்ள திரு. பிரிட்டோவை யு. என். பி. நிறுத்தியுள்ளதாகத்தெரிகிறது. தெமட்டக்கொடையிலும்நாரன்பிட்டியிலும் பழைய அபேட்சகர்களை யு என். பி. மீண்டும் நிறுத்தவில்லை. திரு. கதிரவேலு ஆசாரி சுயேச்சையாகப் போட்டியிடுவாரெனத் தெரிகிறது. மேயர் வின்சன்ட் பெரேராவை எதிர்த்து ஒரு பெண் போட்டியிடுவார்.

வவனியா, செவ்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு எம். திருச்செல்வம் இவ்வார இறுதியில் வவனியா மாவட்டத்துக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்கிருர். சனிக்கிழமை இவர் வவனியா உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனும், ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனும் மகாநாடுகள் நடத்துவார். மாவட்டத்தின் பலபகுதிகளுக்கும் இவர் விஜயம் செய்வார்.